செ.வெ.எண்.147/2009(செமதொஅ) நாள். 31.05.2009

**காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தேனாம்பாக்கம் ஊராட்சியில் 3900 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தேனம்பாக்கம் ஊராட்சியில் உள்ள காமாட்சியம்மன் காலனி விஷ்ணு காஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு தேனம்பாக்கம் ஊராட்சியில் உள்ள 3900 குடும்பங்களுக்கு இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி விழாப் பேருரையாற்றியதாவது,

நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு முதல் விழாவாக நடைபெறுகிறது. விழாவில் கலந்து கொண்டு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகு தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை தமிழகம் முழுவதும் ரூ.1518 கோடி மதிப்பில் 62.8 லட்சம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 2 லட்சத்து 51 ஆயிரத்து 149 குடும்பங்களுக்கு ரூ.68 கோடி மதிப்பில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நான்காவது கட்டமாக ரூ.37 கோடியில் 1 லட்சத்து 57 ஆயிரத்து 950 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த தேனம்பாக்கம் ஊராட்சியில் மட்டும் 3900 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. மாதம் ஒன்றுக்கு 2.5 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. இன்னும் 6 மாதத்தில் அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். கடந்த 3 ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளுக்கு நாடாளுமன்ற தேர்தலில் கிடைத்த வெற்றியாகும். தமிழகம் முழுவதும் புதிய பேருந்துகள், தரமான சாலைகள், குடிநீர் பிரச்சனை போன்றவைகளை தீர்க்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இதுவரை 32 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஸ்ரீபெரும்புதூர், மறைமலைநகர், திருப்போரூர் போன்ற பகுதிகளில் 300க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் துவங்கப்பட்டு லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற 3 லட்சம் இளைஞர்களுக்கு புதியதாக வேலைவாய்ப்பு வழங்கபட்டுள்ளது. இந்த தேனம்பாக்கம் ஊராட்சியில் மட்டும் வெள்ளத்தின் போது ரூ.47 லட்சம் வெள்ள நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. வருகிற ஜுன் 3ந் தேதி தமிழகம் முழுவதும் ஒரு கோடி குடும்பங்களுக்கு புதிய மருத்துவ காப்பீடு என்கிற ஒரு அற்புதமான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்க உள்ளார். இதனால் ஏழை-எளிய மக்களுக்கு ரூ.1 லட்சம் வரை மருத்துவ நிதியுதவி கிடைக்கும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் (பொ) திரு.அ.நம்பிராஜன் அவர்கள் தலைமையுரையாற்றிப் பேசியதாவது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஏழை-எளிய மக்களுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். நிலமற்ற ஏழை விவசாய குடும்பங்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கும் திட்டம், அரசு புறம்பாக்கு நிலங்களில் 5 ஆண்டுகள் குடியிருந்தால் அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம், ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, பிற்பட்டோர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, நலிந்தோர் உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, பள்ளி மாணவ-மாணவிகளுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம், இலவச பேருந்து பயண அட்டை, இலவச வண்ணத் தொலைக்காட்சித் திட்டம், திருமண உதவித்தொகை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இன்று தேனம்பாக்கம் ஊராட்சியில் 3900 குடும்பங்களுக்கு இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 51 ஆயிரத்து 149 குடும்பங்களுக்கு ரூ.68 கோடி மதிப்பில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது. நான்காவது கட்டமாக ரூ.37 கோடியில் 1 லட்சத்து 57 ஆயிரத்து 950 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகிறது என கூறினார்.

இந்த விழாவில் முன்னதாக காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திரு.பி.எம்.குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.விஸ்வநாதன் அவர்கள் முன்னிலையுரையாற்றினார். மாவட்ட தொலைப்பேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.கி.ஆறுமுகம், மாவட்ட கைத்தறி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முடிவில் தேனம்பாக்கம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திரு.எம்.பி.வெற்றி அவர்கள் நன்றி கூறினார். விழாவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.எம்.ஆதிமூலம், காஞ்சிபுரம் வட்டாட்சியர் திரு.ஜெ.சம்பத், உள்ளாட்சித்துறை பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.